Registered as a Newspaper

# உதயன்

சுடர்: 41
கதிர்: 87

சனிக்கிழமை
21 பெப்ரவரி 2026

மாசி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



விசேட குழுவின் பரிந்துரைக்கு அமைய

# அரசியற்கைதிகள் விடுவிக்கப்படுவர்

நீதியமைச்சர் வாக்குறுதி

**கொழும்பு, பெப்ரவரி 21**

விசேட அறிக்கைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய அரசியற் கைதிகள் விடுவிக்கப்படவும், தண்டனைக்காலம் குறைக்கப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

>>>11

# லண்டனில் நாமல் நிச்சயம் பேசுவார்

பெரமுன தகவல்

கொழும்பு, பெப். 21
புலம்பெயர் புலிகளின் அழுத்தத்துக்கு அச்சப்பட்டு, நாமலின் லண்டன் உரையைக் கைவிடப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன

>>>10




யாழ். பல்கலைப் பட்டமளிப்பு

## மாணவி யூலிற்றாவுக்கு ஏழு தங்கப்பதக்கங்கள்

யாழ்ப்பாணம், பெப். 21
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாளான நேற்று முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகத் துறையில், தங்கராசா ஜஸ்மின் யூலிற்றா எனும்

>>>11

செல்வச்சந்தியில் நேற்று


## பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகக் கையொப்பம் சேகரிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 21
பயங்கரவாதத் தடைச்சட்டமும் வேண்டாம், பயங்கரவாதத்திலிருந்து அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கெனக் கொண்டுவரவுள்ள புதிய சட்ட

>>>10



## சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நிதர்சன்!



யாழ்ப்பாணம், பெப். 21
சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக,சி.நிதர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.
சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரிக்கு எதிராக பொதுமக்களால் பல்வேறுகுற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்தன .

>>>11

பிரிட்டன் பயண நிதிமோசடி

## விசாரணைக்கு வருவதற்கு ரணிலின் மனைவி மறுப்பு!

கொழும்பு, பெப். 21
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி மைத்திரி விக்கிரமசிங்க, குற்றப்புலனாய்வுத் திணைக்கள விசாரணைக்காக முன்னிலையாக முடியாது என்று அறிவித்துள்ளார்.
முன்னாள்

>>>11

## கச்சதீவுப் பெருவிழா; ஏற்பாடுகள் நிறைவு!

விரிவு பக்கம்:-11


## இராணுவத்திடம் ஒப்படைத்த எங்களின் உறவுகள் எங்கே?

கிளிநொச்சியில் நேற்றும் போராட்டம்

கிளிநொச்சி, பெப். 21
இராணுவத்திடம் ஒப்படைத்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரியும் கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

>>>11





## இலங்கை எப்போதும் மதிப்புள்ள அயலகம்!

ஜனாதிபதி அநுரவுடனான சந்திப்பில் இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு!

கொழும்பு, பெப். 21
இந்தியாவின் மதிப்புமிக்க அயல்நாடு என்ற வகையில், இலங்கைக்கு எப்போது முக்கியத்துவம் வழங்கப்படும் இவ்வாறு இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
இந்தியாவில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு

>>>11



"அயலகம் எண்டு
சொல்ல சொல்லி
இரண்டகம் செய்யாட்டி
சரி கண்டியளோ"

காலாவதியான உணவுகள்

## வணிக நிலையங்களுக்கு விதிக்கப்பட்டது தண்டம்!

யாழ்ப்பாணம், பெப். 21
காலவதியான உணவுப் பொருட்களை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்த வெதுப்பகம் மற்றும் பல்பொருள் அங்காடி என்பவற்றின் உரிமையாளர்களுக்கு 70 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார்.
பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்

>>>11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 20.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4353 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 14 58 71 72 |
| விசேட எழுத்து | M |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 20.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1420 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 27 55 57 61 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 20.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0379 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 6 3 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 20.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2459 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 32 36 49 63 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 20.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6111 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 8 9 1 0 7 6 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 20.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2141 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 33 78 79 81 |
| விசேட எழுத்து | Q |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 20.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0227 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 32 43 |

# போதைப்பொருள்கள், துஷ்பிரயோகங்கள் பிரபாகரன் இருந்த காலத்தில் கிடையாது!

## இன்று நிலைமை தலைகீழ் இராதாகிருஷ்ணன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.21

**வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்த காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போதைப்பொருள் பாவனையோ அல்லது பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களோ இடம்பெறவில்லை. அன்றைய ஒழுக்கக்கட்டுப்பாடு இன்றைய காலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.**

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நீதித்துறை மற்றும் போதைப்பொருள் தொடர்பான சட்டத்திருத்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கடந்த காலத்தில் பிரபாகரன் வடக்கு மற்றும் கிழக்கைப் பொறுப்பேற்று நடத்திய போது, அங்கு போதைப்பொருள் என்ற பேச்சே கிடையாது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளோ, துஷ்பிரயோகங்களோ இடம்பெறவில்லை. ஆனால் இன்று அங்கிருக்கும் நிலைமை முற்றிலும் தலைகீழாக மாறியுள்ளது.

அங்கு போதைப்பொருள் கலாசாரம் வேரூன்றியுள்ளது. இதேபோன்றதொரு அபாயகரமான சூழல் தற்போது மலையகப் பகுதிகளிலும் தீவிரமடைந்துள்ளது. போதைப்பொருள் பாவனையால் பல குடும்பங்கள் சிதைந்து போயுள்ளன. குற்றச் செயல்களும் கொலைகளும் அதிகரித்துள்ளன. இஸ்லாமிய நாடுகளில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனைக்கு மிகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதன் காரணமாகவே அங்கு குற்றங்கள் குறைவாக உள்ளன.

இலங்கையிலும் அத்தகைய கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். தண்டனைகள் கடுமையானால் மட்டுமே குற்றங்களைக் குறைக்க முடியும்- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 20.02.2026 | வெள்ளிக்கிழமை | 0819 | M | 8 6 2 0 5 6 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 20.02.2026 | வெள்ளிக்கிழமை | 3085 | E | 12 16 18 35 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 20.02.2026 | வெள்ளிக்கிழமை | X | 05 21 53 65 | 5246 |

**SASIRI DLB**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 20.02.2026 | வெள்ளிக்கிழமை | 0915 | 15 30 50 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 20.02.2026 | வெள்ளிக்கிழமை | | 02 31 39 58 | 4797 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 20.02.2026 | வெள்ளிக்கிழமை | E | 02 | 39 41 49 73 | 2261 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 20.02.2026 | வெள்ளிக்கிழமை | R | 01 66 69 72 | 2911 |

# வெளிநாட்டுப் பிரஜை விபத்தில் உயிரிழப்பு!

கண்டி, பெப்.21

கண்டி பதியத்தலாவ வீதியில் மொரகஹமுல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 46 வயதுடைய நெதர்லாந்து நாட்டவர் எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.21

மஹியங்கனை மெதஓயா பகுதியில் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாப்பாகடவெவப் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவராவார். சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட மின்சாரக்கம்பி தாக்கியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# வாகனப் பதிவுகள் ஜனவரியில் உயர்வு


கொழும்பு, பெப்.21



இலங்கையின் வாகனச் சந்தை 2026ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே ஒரு பெரிய வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

புதிய தரவுகளின்படி, ஜனவரி மாதத்தில் வாகனப் பதிவுகள் 55,365 யூனிட்களை எட்டி புதிய சாதனையைப் படைத்துள்ளன. கடந்த ஆண்டு டிசெம்பருடன் ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் பதிவுகள் சுமார் 14 வீதம் அதிகரித்துள்ளன. இருசக்கர வாகனங்களே அதிகளவில் பதிவாகியுள்ளன.

அதேவேளை மின்சார இருசக்கர வாகனங்களின் தேவை அதிகரித்து வருகிறது. ஜனவரியில் மட்டும் 2,976 மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. புதிய கார்களின் பதிவு குறைந்துள்ள போதிலும், இரண்டாம் கை கார்களுக்கான தேவை அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# புலிகளின் உயிரிழப்பு கடந்தாண்டில் உயர்வு

கொழும்பு, பெப்.21


2025 ஆம் ஆண்டில் மனித நடவடிக்கைகள் உட்பட பல்வேறு காரணங்களால் நாட்டில் 25 சிறுத்தைப்புலிகள் உயிரிழந்துள்ளன என்று வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டில் 14 சிறுத்தைப் புலிகள் உயிரிழந்துள்ளன. 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் நாட்டில் 51 புலிகள் இறந்துள்ளன. வருடாந்திர புலி இறப்புகளில் சுமார் இருபது சதவீதம் மட்டுமே பதிவாகியுள்ளன.

மேலும் பல புலி இறப்புகள் பதிவாகாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# அனுஷவுக்கு பிணை!



கொழும்பு, பெப்.21

முறையற்ற வகையில் சொத்துகளை ஈட்டிய சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவை பிணை அனுமதி வழங்கி கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களைப் பரிசீலித்ததன் பின்னர், கொழும்பு மேலதிக நீதவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பி.க்களுக்கு மாதாந்தம் 223,785 ரூபா கொடுப்பனவு

## நாடாளுமன்றத்தில் விவரம் வெளியீடு

**கொழும்பு, பெப்.21**

**இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்த சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் குறித்த உத்தியோகபூர்வ விவரங்களைப் பிரதமர் ஹரினி அமரசூரிய நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார்.**

ஐக்கியமக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இந்த விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அடிப்படை மாதாந்தக் கொடுப்பனவு 54,285 ரூபாவும் அலுவலகக் கொடுப்பனவு 100,000 ரூபாவும், தொலைபேசிக் கொடுப்பனவு 50,000 ரூபாவும், போக்குவரத்துக் கொடுப்பனவு 15,000 ரூபாவும், உபசரிப்புக் கொடுப்பனவு 1,000 ரூபாவும், சாரதி கொடுப்பனவு 3,500 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

அத்துடன் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு நாளுக்கும் 2,500 ரூபா வீதம் வழங்கப்படும். அமர்வுகள் இல்லாத நாள்களில் நடைபெறும் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டாலும் ஒரு நாளைக்கு 2,500 ரூபா வழங்கப்படும்.

எரிபொருள் கொடுப்பனவு நாடாளுமன்ற உறுப்பினர் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு இடையிலான தூரத்தை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் கொடுப்பனவு தீர்மானிக்கப்படுகிறது.

தேசியப் பட்டியல் உறுப்பினர்களுக்கும் மாதாந்தம் 419.76 லீற்றர் டீசல் வழங்கப்படுகிறது. எரிபொருள் மற்றும் தினசரி அமர்வுக் கொடுப்பனவுகள் தவிர்ந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கான நிலையான மாதாந்தக் கொடுப்பனவு 223,785 ரூபாவுக்கும் அதிகமாக வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சுற்றுலாத்துறை அபரிமித வளர்ச்சி

கொழும்பு, பெப்.21

இலங்கையின் சுற்றுலாத்துறை வலுவான மீட்சியைக் கண்டுள்ள நிலையில், இந்த ஆண்டின் முதல் ஒன்றரை மாதங்களுக்குள் 4 இலட்சத்து 36 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார். கடந்த 15ஆம் திகதி வரையிலான குறுகிய காலப்பகுதியில் இத்தனை சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளமை ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது. சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள், பிரதானமாக ரி 20 கிரிக்கெட் தொடர்கள், இலங்கையின் மீதான சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்தை அதிகரித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கு கொழும்பில் மகா சங்க மாநாடு!

கொழும்பு, பெப்.21

இலங்கையின் பௌத்த கலாசாரத்துக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு அச்சுறுத்தல்களை முறியடிப்பது மற்றும் பிக்குகளுக்கு எதிராக விடுக்கப்படும் அழுத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் மகா சங்க மாநாடு கொழும்பில் நேற்று நடத்தப்பட்டுள்ளது.

தற்போது பௌத்த பிக்குகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படுவதாகக் கூறப்படும் அழுத்தங்களுக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துதல், பௌத்த கலாசாரம் எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்துப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்துதல், நாட்டில்தலைதூக்கும்பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுதல் என்பன இந்த மாநாட்டில் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## இந்திய மீனவர்கள் 10 பேருக்கு மறியல்

மன்னார்,பெப்.21

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 10 தமிழக மீனவர்களையும், எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள், ரோந்துப் பணியில் ஈடுபட்ட தலைமன்னார் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த 2 படகுகளும் கைப்பற்றப்பட்டன. மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட மீனவர்கள், மன்னார் நீதிமன் றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதவான், குறித்த 10 மீனவர்களையும் விளக்கமறி யலில் வைக்க உத்தரவிட்டார். (த-56)

## 'ஒட்டிசம்' விழிப்புணர்வுக்கு புதிய தேசிய செயற்றிட்டம்

கொழும்பு, பெப்.21

நாட்டில் ஒட்டிசம் எனப்படும் மதியிறுக்க நிலை குறித்த விழிப்புணர்வை அடிமட்ட மக்கள் மத்தியிலும் கொண்டு செல்லும் நோக்கில், 'மரக்-2026' எனும் தேசிய விழிப்புணர்வுச் செயற்றிட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வுத் திட்டத்தின் ஓர் அங்கமாக, எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி கண்டியில் உலகின் மிக நீளமான உணர்வுசார் சுவர் நிறுவப்படவுள்ளது. ஒட்டிசம் பாதிப்புடையவர்களின் மூளை புலன் தகவல்களை எவ்வாறு உணர்கிறது என்பதைப் பொதுமக்கள் நேரில் கண்டு புரிந்துகொள்வதே இதன் நோக்கமாகும். தொட்டுணரக்கூடிய பாகங்கள், ஒளி மற்றும் சத்தம் போன்ற புலன்களைத் தூண்டக்கூடிய அம்சங்கள் இதில் இடம்பெறும்.

மாணவர்கள் மற்றும் கலைஞர்களின் கூட்டு முயற்சியில், இலங்கையின் மரபுகளைப் பிரதிபலிக்கும் ஓவியங்கள் மற்றும் மீள்சுழற்சி செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு இந்தச் சுவர் வடிவமைக்கப்படவுள்ளது. (ச-இ)




## ஒரேயொரு பட்டத்துக்கு இவ்வளவு அக்கப்போரா?

**கோயில் திருவிழாக்களுக்குப் போற சின்னப்பிள்ளையள், அங்க 'மணிக்கடையளில' இருக்கிற விளையாட்டுச்சாமான்களைக் கண்டிட்டு, 'அதை வாங்கித் தந்தால் தான் வீட்ட வருவன்' எண்டு அடம்பிடிச்சு அழுவினம். அதுவும் எந்த விளையாட்டுச்சாமான் விலை கூடவோ, அதுதான் வேணுமெண்டு ஒற்றைக்காலில அவை நிக்கிறதால, தாய் தகப்பனுக்குத்தான் தர்மசங்கடம். ஏனெண்டால் அந்தளவு காசு அவையிட்ட பெரும்பாலும் இருக்காது. அதோட வழக்கமா அந்த விளையாட்டுச்சாமான் ஆயிரம் ரூபா எண்டால், திருவிழாக்காலங்களில நாலாயிரம், ஐயாயிரம் எண்டுதான் விப்பாங்கள். அதால அழுகிற பிள்ளையைச் சமாதானப்படுத்த "பிள்ளைக்கு அந்த விளையாட்டுச் சாமான் வாங்கித்தந்தால் சரிதானே. இண்டைக்கு அறாவிலை விப்பினம். அதோட நல்ல விளையாட்டுச்சாமானோ எண்டு பார்த்தும் வாங்கேலாது. நாங்கள் திருவிழா முடிஞ்சு வந்து மலிவா வாங்கித் தாறம். இப்ப அழமால் ஐஸ்கிறீம் குடிச்சிட்டுப் போவம்" எண்டு சொல்லுவினம். பிள்ளையும் அதைநம்பி அழுகையை நிப்பாட்டிப் போடும். அப்பிடி 'அவருக்குச் செய்த மாதிரி எனக்கும் செய்யோணும்'எண்டு ஒரு அரசியல்வாதி அழுததும், அவரைச் சமாதானப்படுத்த அவரின்ர ஆதரவாளர்மார் செய்த கூத்தும் தான் இப்ப பேஸ்புக்கில வைரல். இத்தனைக்கும் அந்த அரசியல்வாதி இந்தியாக்காரர். அவர் வேற ஆருமில்லை, செந்தமிழன் சீமான் தான்.**

**வல்வெட்டித்துறையில ஒவ்வொரு பொங்கலுக்கும் பட்டத்திருவிழா நடக்கும். அதுக்குமுதலே பட்டம் விடுற சீசன் வடமராட்சியில தொடங்கிடும். சின்னன் சிறிசு தொடக்கம் கிழடுகட்டை வரை எல்லாரும் விதவிதமாப் பட்டம் கட்டுறதும், வெளியில கொண்டுபோய் ஏத்துறதுமா பாக்கவே ஒரு கொண்டாட்டம் மாதிரி இருக்கும். அப்பிடிப் போன வருசமும் இந்த வருசமும் நடிகர் விஜயின்ர கட்சிச் சின்னம் போட்டு, நாப்பதடியில பென்னம் பெரிய பட்டம் பறக்கவிட்டவை., அதைவிட பட்டத்திருவிழாவிலையும் விஜயின்ர படம் போட்ட பட்டங்களை ஏத்தினவை. அப்பிடி விஜயின்ர கட்சிக்கொடி போட்ட நாப்பதடி பட்டமும், அவரின்ர படம் கீறின பட்டமும் ஏத்துப்படுற வீடியோ வைரலாகி, அது இந்தியா மட்டும் பரவிட்டுது. இதைப் பாத்ததும் சீமானுக்கு கொதிப்பு வந்திட்டாம். 'ஈழத்தமிழருக்காக நான் தான் இஞ்ச குத்திமுறியிறன். ஆனால் தலைவர் பிறந்த மண்ணில எங்கட கட்சிக்கு பட்டம் ஏத்தாமல் விஜய்க்கு பட்டம் ஏத்துகினம்' எண்டு தனக்கு 'திரள்நிதி' தாற புலம்பெயர் குஞ்சுகளிட்ட புலம்பியிருக்கிறார். அண்ணன் இப்பிடிக் கண்ணீர் மல்கி, கதறியழுகிறதைப் பாத்திட்டு அவை 'அண்ணை அழாதையுங்கோ, பட்டத் திருவிழா முடிஞ்சாலும், காத்து ஓய்ஞ்சாலும் உங்களுக்கு நாங்கள் பட்டம் ஏத்திக்காட்டுறம்'எண்டு சபதம் செய்திருக்கினம். பிறகு 'செந்தமிழனுக்கு' பட்டம் ஏத்தவெண்டு சொல்லி, அங்க உண்டியல் குலுக்கிக் காசு சேர்த்து, அதில கொஞ்சத்தை ஊருக்கு அனுப்பி பட்டம் ஏத்தச் சொல்லி ஓர்டர் போட்டிருக்கினம்.**

**உடனேயே நாம் தமிழர் கட்சிச் சின்னத்த பிரிண்ட் பண்ணி, வட்டமா ஒரு பட்டத்தில ஒட்டி, நாலைஞ்சுபேர் வல்வெட்டித்துறையில போய் ஏத்தியிருக்கினம். அப்பிடி ஏத்தேக்க, கொஞ்ச யூரியூப்பர்மாரையும் கூட்டிக்கொண்டு போய், அதை வீடியோ எடுத்து ஏதோ ஒட்டுமொத்த ஈழத் தமிழரும் அந்தக் கட்சிக்காக பட்டம் ஏத்தின மாதிரி போட்டிருக்கினம். அதுக்குப் பிறகுதான் சீமான்ர கவலை தணிஞ்சுதாம். ஒரேயொரு பட்டத்தால அண்ணனுக்கு தனக்கு இஞ்ச ஆதரவு கூடி, திரள்நிதி இன்னும் குவியும் எண்டோ, இந்தப் பட்டத்தைப் பார்த்து 'எங்கட கட்சித் தலைவருக்கு சிலோன்ல நல்ல செல்வாக்கு'எண்டு நினைச்சு அவருக்கு விழுகிற வாக்குகள் கூடுமெண்டோ சீமான் கனவு கண்டால், எல்லாமே நூலறுந்த பட்டமாத்தான் போடும். இப்ப சீமான்ர குஞ்சுகள் இந்தப் பட்டம் ஏத்தினதை ஏதோ தமிழீழம் கிடைச்சமாதிரி கொண்டாடுறதைப் பாக்க அழுகிறதா, சிரிக்கிறதா எண்டு தெரியாமல் கிடக்கு கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமலாக்கப்பட்ட ஊடகர்கள்; இந்த அரசிலும் நீதியில்லையா?

## பருத்தித்துறையில் இன்று போராட்டம்

**யாழ்ப்பாணம், பெப்.21**

**வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த ஊடகவியலாளர் சுப்பிரமணியம் இராமச்சந்திரன் சிறிலங்கா இராணுவத்தினாரால் கைதுசெய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டு 19 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் குறித்த சம்பவத்துக்கு நீதி கோரி யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறையில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

குறித்த சம்பவம் தொடர்பில் பல்வேறு சாட்சியங்கள் இருந்த போதிலும் இதுவரை உரிய விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படாதுள்ளது. ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்ட மற்றும் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு நீதி வழங்குவோம் எனக் கூறி தற்போதைய அரசு ஏமாற்றுகின்றது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கேட்டு பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-100,66)

# முதியோர் இல்லங்களைப் பதிவுசெய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 21



யாழ். மாவட்டத்தில் பதிவுசெய்யாது இயங்கும், அனைத்து முதியோர் இல்லங்களையும், எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர், பதிவுசெய்யுமாறு, யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த முன்னேற்றக் கலந்துரையாடலில், அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

பதிவுசெய்வதற்கான விண்ணப்பப் படிவத்துடன், உரிய ஆவணங்களை இணைத்துப் பிரதேச செயலரின் சிபாரிசுடன், யாழ். மாவட்டச் செயலகத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கலந்துரையாடலில், கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் முதியோர் சேவைகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 2026 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. முதியோர் சேவைகள் தொடர் பிலான உரிய உத்தியோகத்தர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு, அதற்கான தீர்வுகளும் யாழ். மாவட்டச் செயலரால் வழங்கப்பட்டன. (க-66)

# சேனைப்புலவுப் பாலம் விரைவில் புனரமைப்பு

வவுனியா, பெப். 21

வவுனியா வடக்கு நெடுங்கேணியிலுள்ள, சேனைப்புலவுப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்குப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாலப்புனரமைப்புத் தொடர்பான கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

சேனைப்புலவு முதலாம் ஒழுங்கையில் பாலம் அமைக்கப்படவேண்டும். பிரதானமாக நெடுங்கேணிக் குளத்திலிருந்து வெளியேறும் மேலதிக நீர்ப் பாதையை ஊடறுத்துப் பாய்வதால், அவ்வீதியின் போக்குவரத்துத் தடைப்படுகின்றது. இதனால் 150 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களுக்கும், தோட்டங்களுக்கும் செல்லும் மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மருத்துவச் சேவையைப் பெறுவதற்குக்கூட மக்கள் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்தே பயணிக்கவேண்டியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த பணிப்பாளர், உரிய திட்டங்களில் உள்வாங்கி, சேனைப்புலவு முதலாம் ஒழுங்கையில் பாலத்தை நிர்மாணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்-என்றார். (க-246)

# நல்லூர்த் தவிசாளருக்கு எதிராக முறைப்பாடு!

யாழ்ப்பாணம்,பெப். 21

திருநெல்வேலிப் பகுதியில் தனியார் ஒருவரால் மேற்கொள்ளப்படும் விளம்பரச் சேவையை முன்அறிவித்தல் இன்றி நிறுத்தியமை தொடர்பில், நல்லூர்ப் பிரதேச சபையின் தவிசாளருக்கு எதிராக, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தனியார் ஒருவரால் பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற விளம்பர ஒலிபரப்புச் சேவையை, அரசியல் பழிவாங்கல் காரணமாக முன்னறிவித்தல் இன்றி, உடனடியாக மூடும் படி சபையால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று நிறுவன உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். (க-27)



# இரு நூல்களின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 21

தமிழியற்கழகத்தின் ஏற்பாட்டில், முல்லை முகுந்தினியின் இரு நூல்களின் வெளியீட்டு விழா (புயலடித்த தேசம், முள்ளிவாய்க்காலும் முட்கம்பி வேலியும்) நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பதில் பீடாதிபதி கலாநிதி கி. சண்முகநாதன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட தமிழ்த்துறை சிரேஷ்ட பேராசிரியர் கி. விசாகரூபன், யாழ். போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர் சி. சிவன்சுதன் ஆகியோரும் கலந்துகொள்வர். நூல் வெளியீட்டுரையை, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் சி. செரஞ்சன் நிகழ்த்துவார். (க-159)

# தொழில்நுட்ப முயற்சியாண்மை மாநாடு; வவுனியா பல்கலையில் இரு நாள்கள்!

வவுனியா, பெப். 21

'தொழில்நுட்ப அடிப்படையிலான தொழில்முனைவுத்திறனும் எதிர்கால மனிதகுலமும்' என்ற கருப்பொருளின் கீழ், 32ஆவது சர்வதேச தகவல் தொழில்நுட்ப மற்றும் முயற்சியாண்மை மாநாடு நாளைமறுதினம் 23 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்படவுள்ளது. இதுதொடர்பாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் அ. அற்புதராஜா தெரிவித்துள்ளதாவது-

சர்வதேச ITAM அமைப்பு, பல்கலைக்கழகத் தொழில் இணைப்பு (UBL) மற்றும் சர்வதேச விவகாரமையம் (CIA) ஆகியவற்றுடன் இணைந்து இந்த மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாடு முன்னோடியான ஆராய்ச்சிகளைப் பகிர்வு செய்தல், வளர்ந்து வரும் தொழில்நுட்பப் போக்குகளைப் பற்றிக் கலந்துரையாடல், சர்வதேச கல்வி ஒத்துழைப்பை வலுப்படுத்தல், பல்கலைக்கழகம் மற்றும் தொழில்துறை நிலைத்த கூட்டாண்மைகளை உருவாக்கல், உலகளாவிய ரீதியில் முன்னோடி ஆராய்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாநாட்டுக்கு முந்தைய முக்கியமான உரை "ஆசியாவின் எதிர்காலம்" என்ற தலைப்பில் தேர்ச்சிபெற்ற சர்வதேச அறிஞர் குழாமின் பங்களிப்புடன் நிகழ்த்தப்படவுள்ளது. இதில் ஆசியாவின் பொருளாதார மாற்றம், டிஜிற்றல் முன்னணி நிலை மற்றும் உலகளாவிய பங்கு ஆகியவை ஆராயப்படும்.

அத்துடன் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வு, டிஜிற்றல் வணிகம் மற்றும் மின்னணு வாணிபம், தொழில்நுட்ப அடிப்படையிலான தொழில்முனைவு, நிலையான முகாமைத்துவ நடைமுறைகள் என்பன தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரை அமர்வுகள் இடம்பெறவுள்ளன. இம்மாநாட்டுக்கு தென்கொரியா, இந்தியா, நேபாளம், சீனா, ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட நாடுகளிலிருந்து பேராளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்- என்றார். (ச-இ)

# போதைமாத்திரைகளை விநியோகித்தவர் கைது



கொழும்பு, பெப். 21

பாலத்துறை பகுதியில் போதைமாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் மேல் மாகாண தெற்கு குற்றப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து 21 ஆயிரம் போதைமாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் நடத்திய விசாரணையில், போதைமாத்திரைகளை பல்வேறு நபர்களுக்கு விநியோகித்து வந்தமை தெரிய வந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## மரணப்பொறியைத் தேடி...!

ஈரானுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவு மிகவும் நீட்சியானது. இந்த உறவை மேலும் வலுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என அறிவித்துள்ளார் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ. இறைமையுள்ள ஜனநாயக நாடே இலங்கை. அமைச்சர் நளிந்த வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகள் இலங்கையின் இறைமையுடன் இரண்டறக் கலந்தவை. அதில் தவறெனக் கூறுவதற்கோ அல்லது விமர்சிப்பதற்கோ எதுவும் இல்லை. ஆனால், உலக நாடுகளின் இறைமையும், ஜனநாயகத் தத்துவங்களும் உருத்தெரியாமல் சிதைக்கப்படும் இக்காலத்தில், அமைச்சர் நளிந்த கூறியிருக்கும் கருத்துகள் இடம் - பொருள் - ஏவல் பாராத வார்த்தைகளே.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக ஏகப்பட்ட பிரச்சினைகளும், பெருவிரிசல்களுமே ஏற்பட்டுள்ளன. ஈரானின் போர்த்தந்திரி என்று அறியப்பட்ட சுலைமானி ட்ரம்பின் கடந்த ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட பின்னர், ஒவ்வொரு நாளும் பற்றியெரிந்து வந்த இந்தப் போர்த்தீ, ஒட்டுமொத்த உலகையும் விழுங்கப்போகும் காலம் இது. இந்தப் போரை அமெரிக்கா முன்னெடுப்பதன் பின்னணியில் உள்ள அடிப்படை விடயங்கள் இரண்டுதான். ஒன்று, ஈரானின் கரங்களில் இருந்து ஏவுகணைகளையும், அணுவாயுதத் தொழில்நுட்பத்தையும் பறித்தெடுப்பது. மற்றையது ஈரானைத் தனிமைப்படுத்துவது. இதற்கு எந்தெந்த நாடுகள் ஒத்துழைக்க மறுக்கின்றனவோ அதற்கெல்லாம் அமெரிக்கா பொருளாதாரத் தடைகளையும் வரிகளையும் விதிக்கும். இதற்கு உதாரணமாக, ரஷ்யாவைத் தனிமைப்படுத்தும் திட்டத்துக்கு இடையூறாக, ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் கொள்வனவு செய்த இந்தியாவுக்கு ஏகப்பட்ட வரிகளை அமெரிக்கா விதித்ததைப் பார்த்தோம்.

இலங்கை போன்ற சிறிய நாடுகள், மதில்மேல் பூனையாக-ஒருவித அணிசேராக் கொள்கையுடன் இருந்தால் மட்டுமே தப்பித்துக்கொள்ளலாம். யதார்த்தம் இவ்வாறிருக்கையில், ஈரானுடன் இலங்கை நெருக்கமாகப் பயணிக்கும் என்றும், ஈரானுடனான உறவைப் பலப்படுத்துவோம் எனவும் அறிவிப்பதெல்லாம் தற்போதைய காலச்சூழலில் பொருத்தமற்ற அறிவிப்புகளே. ஏனெனில் இந்தக் கருத்துகளை அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ அவ்வளவு சாதாரணமாக எடுத்துவிட்டு நகரப் போவதில்லை. வெளிப்படையாகக் கூறுவதாயின், இலங்கை-அமெரிக்கா-இஸ்ரேல்-ஈரான் இந்த நான்கு நாடுகளையும் மையப்படுத்திய பாதுகாப்புக் கரிசனைகள், சர்வதேசப் பிரச்சினைகள், விசாரணைகள், விசாரணை வளையங்கள், திரைமறை அழுத்தங்கள் உருவாகுவதற்கான சாத்தியங்கள் மிகமிக அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் என்பது தூதரக - இராஜதந்திர விவகாரம் அல்ல. இது முழுக்கமுழுக்க ஆயுதங்களை மையப்படுத்தியது. சீனா-இந்தியா விவகாரம் போன்று ஈரான்-அமெரிக்கா விவகாரத்தை இலங்கை அணுகமுடியாது-அணுகவும் கூடாது. எனவே தெரிந்தோ அல்லது தெரியாமலோ நரகப்பொறிக்குள் ஆட்படும் செயற்பாடுகளை இலங்கை உடனடியாகக் கைவிடவேண்டும். அர்ப்பணிப்பான இராஜதந்திரத்தை உடன் வெளிப்படுத்த வேண்டும்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### பொய்யாமொழி

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்**

**பொருள்:** இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானால். ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும் பயன் இல்லை.




## மாகாணசபைத் தேர்தலுக்காக விசேட நாடாளுமன்றக்குழு!



**கொழும்பு, பெப்.21**
**மாகாணசபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையின் கீழ் நடத்தவேண்டும் என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், அதுதொடர்பான முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைக்கவும் நாடாளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.**

நாடாளுமன்றம், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்றுக் கூடியது. அதிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் இந்தக் குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## காலஅவகாசம் கோரும் மைத்ரி விக்கிரமசிங்க

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி மைத்ரி விக்கிரமசிங்க, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில்வாக்குமூலம்வழங்குவதற்கு கால அவகாசம் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. உடல் நலக் குறைபாட்டின் காரணமாக மைத்திரி விக்கிரமசிங்க முன்னிலையாக முடியாது எனத் தெரிவித்துள்ளதாகவும், இரண்டு வார காலங்கள் கால அவகாசம் கோரப்பட்டுள்ளதுஎன்றும்தகவல்கள் வெளியாகியுள்ளன. மைத்ரி விக்கிரமசிங்க நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (எ-இ)



## அக்குரேகொடை துப்பாக்கிச்சூடு; சந்தேகநபர் அடையாளம்

கொழும்பு, பெப்.21
அக்குரேகொடையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி மற்றும் அவருக்கு உதவிசெய்த சாரதி ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த காலங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் ஒப்பிடும்போது தற்போது அவை குறைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட சொத்துகள் முடக்கம்

கொழும்பு, பெப். 21
சட்டவிரோதச் செயல்கள் மூலம் ஈட்டப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகளை முடக்கும் நடவடிக்கையின் கீழ், வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான 3 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சொத்துகளைப் புலனாய்வுப் பிரிவினர் முடக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடிகமுவ பகுதியில் வாங்கிய 14.1 பேர்ச் நிலம் மற்றும் 3 மாடி வீடுகள் ஆகியவையே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன. (எ-இ)



## பூனைகளின் மூலம் பரவும் 'ரேபிஸ்'

கொழும்பு, பெப். 21
நாட்டில் அண்மைக்காலமாக பூனைகள் மூலமான 'ரேபிஸ்' எனப்படும் நீர் வெறுப்பு நோய்ப் பரவல் அதிகரித்துள்ளது என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பொதுவாக கட்டாக்காலி நாய்கள் மூலமே இந்த நோய் பரவுவதாகக் கருதப்பட்டாலும், கடந்த ஆண்டில் பதிவான பெரும்பாலான தொற்றுச் சம்பவங்கள் வீடுகளில் வளர்க்கப்படும் பூனைகள் மூலமே ஏற்பட்டுள்ளது என்று தரவுகள் தெரிவிக்கின்றன. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பூனைக்கடி மற்றும் பூனையால் ஏற்படும் கீறல்கள் அதிகரித்துள்ளன. பூனைகள் கடித்தால் மட்டுமல்ல, அவை நகங்களால் கீறினாலும் வைரஸ் பரவ வாய்ப்புள்ளது. பூனைக் கீறலை சாதாரணமானதாகக் கருதாது அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று தடுப்பூசி பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை

ஞாயிற்றுக்கிழமை - மாசி 10

22.02.2026

சுபநேரம் : 09.31 - 11.01
ராகுகாலம் : 05.01 - 06.31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடியாளர்கள் மீது இனிமேல் கடுமையான நடவடிக்கை

## மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் எச்சரிக்கை

**மன்னார்,பெப்.21**

**மன்னார் மாவட்டத்தில், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது, திணைக்களம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணா தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களில், தெரிவு செய்யப்பட்ட 36 மீனவர்களுக்கு, மீன்பிடி வலைத்தொகுதி வழங்கும் நிகழ்வு, மன்னார் மாவட்டக் கடற்றொழில் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் அவர் தெரிவித்ததாவது-

மீனவர்களுக்கான புதிய வலை உபகரணங்கள் வழங்கும்போது, அவை கடற்றொழில் திணைக்களத்தின் அனுமதி பெற்றவையாக இருக்கவேண்டும். தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் வகையில் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புயல் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, அரசாங்கம் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக 5 பேர் கொண்ட ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு, சேதங்கள் கணக்கிடப்பட்டு இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேவேளை மன்னார்ப் பகுதியில் அண்மைக் காலமாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

சுற்றுச்சூழல் மற்றும் மீன் வளப் பாதுகாப்புக் கருதி, டிராக்டர் இயந்திரம் மூலம் கரைவலை இழுப்பதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. இதுகுறித்து மீனவர் சங்கங்களுக்கு எழுத்துபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் பாரம்பரிய முறையில் கைகளால் வலை இழுக்க அனுமதி உண்டு. ஆனால் இயந்திரங்கள் பயன்படுத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது, திணைக்களம் கடுமையான நடவடிக்கை எடுக்கும்-என்றார்.

நிகழ்வில் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 36 மீனவர்களுக்கு வலைத்தொகுதிகள் வழங்கப்பட்டன. (க-56)

## தீயவழிகளைத் துறந்து மனம் மாறுவோம்

இயேசு ஒருநாள் வரிதண்டுபவரான லேவி என்பவரை சுங்கச் சாவடியில் கண்டு 'என்னைப் பின்பற்றி வா' என்று அழைத்தார். அவர் அனைத்தையும் விட்டு விட்டு இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். அந்த லேவி தன் வீட்டில் இயேசுவுக்கு விருந்தளித்தார். வரி வசூலிப்போர் பாவிகள் என்று கருதப்பட்ட அந்தக்காலத்தில் இந்தப் பாவியின் வீட்டில் உணவருந்துகிறாரே இது நியாயமா? என்று கேள்விகளைத் தொடுத்தனர் பரிசேயர்கள் எனும் சமூகப் பெரியார்கள். இயேசுவின் பதில் அனைவரையும் வாயடைக்கவைத்தது. 'நோயற்றவர்களுக்கு அல்ல நோயுற்றவர்களுக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்'என்றார். (லூக் 5 32)

பார்வையுள்ளோர் சுயமாகச் செல்வர். பார்வையற்றோருக்கு கைத்தடியே துணை. குளத்தில் குளிப்பவருக்கு அல்ல மூழ்குபவருக்கே உயிர்காப்பு மீட்புத்தேவை. போதைக்கு உட்பட்டோருக்கே உள்வளச்சிகிச்சை வேண்டும். நெறி தவறி தீயவழி செல்வோருக்கு இறைவழிகாட்டல் வழங்கி மனம் மாற பாதை வகுக்கவேண்டும். இன்றைய சமூகத்தில் ஆன்மிகத்தைவிட உலகியல் போக்குகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பாவத்தின் கனத்தை உணராமல் அடுத்தவருக்கு துன்பம் விளைவிக்கும் நிலை நீண்டு செல்கிறது. பிறரின் கௌரவத்தை, சுதந்திரத்தை, தன்மானத்தைப் பாதிக்கும் செயற்பாடுகள் தாராளம் ஏராளம். 'தீயோர் சாகவேண்டும் என்பது என்விருப்பம் அல்ல. ஆனால் அத்தகையோர் தம்வழிகளில் நின்று திரும்பி திருந்தி வாழவேண்டும் என்பதே என்விருப்ப'ம் என்கிறார் இயேசு. முயற்சி செய்வோம்.


**எஸ்.யேசுதாஸ்**
**கொழும்புத்துறை**

## பாலபண்டிதர் பட்டம் 21 பேருக்கு

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் இணைந்து நடத்திய 'தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ்' கற்கைநெறியை நிறைவுசெய்த முதலாவது அணியினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உட்புற விளையாட்டு அரங்கத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த 21 பேருக்கு இதன்போது 'பாலபண்டிதர்' பட்டம் வழங்கப்படவுள்ளது. (ச)

## முருங்கைக்காய் கிலோ 4000 ரூபா



யாழ்ப்பாணம்,பெப்.21

குடாநாட்டுச் சந்தைகளில், முருங்கைக்காய் ஒரு கிலோ 4 ஆயிரம் ரூபாவைக் கடந்து விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த சில மாதங்களாக முருங்கைக்காய் சந்தைகளுக்குக் கிடைக்காத நிலையில், ஒரு சில விவசாயிகளால், சந்தைகளுக்கு முருங்கைக்காய் கொண்டுவரப்படுகின்றது. இதனால் நுகர்வோரிடையே, முருங்கைக்காய்க்குக் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அத்துடன் விலையும் உச்சத்தைத் தொட்டுள்ளது. (க-17)

## செல்லப்பா சுவாமிகள் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.21

நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூஜை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

நாளை காலை சுவாமிகளுக்கு அபிஷேகம் நடைபெறும்.

திருமுறைப் பாடல்கள் இசைத்தலைத் தொடர்ந்து காலை 9.30 மணியளவில் இளம்பேச்சாளர் ஜீவா சஜீவன் 'நாவலரின் சமயப் பணி' எனும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவு ஆற்றுவார். நற்சிந்தனை ஓதுதலைத் தொடர்ந்து குருபூசை வழிபாடுகளும் நடைபெறும். (ச-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வீண்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். நண்பர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்குத் தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படும். கணவன்-மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**தனுசு:** தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** இன்று நீங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சி சாதகமாக முடிவதுடன், அதனால் எதிர்பார்த்த ஆதாயமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போ.மருத்துவமனைக்குள் வெற்றிலை பயன்படுத்தத் தடை

யாழ்ப்பாணம், பெப்.21
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாகத்துக்குள், வெற்றிலைப் பயன்படுத்துதல் மற்றும் எச்சில் துப்புதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, தினசரி பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் வருகை தரும், நெரிசல் கொண்ட சுகாதார நிலையமாகும். எனவே மருத்துவமனையைச் சுத்தமாகவும், சுகாதாரத் தரமாகவும் பேணுவது எங்களின் பொறுப்பாகும். நூற்றுக்கும் மேற்பட்ட சுத்திகரிப்பு தொழிலாளர்கள் தினமும் இரவு பகலாகப் பணியாற்றி, விடுதிகள், நடைபாதைகள், கழிப்பறைகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் மிகுந்த தூய்மையுடன் பராமரித்து வருகின்றனர்.
எனினும் சிலர் வெற்றிலைப் பயன்படுத்தி, எச்சில் துப்புவதன் மூலம், மருத்துவமனையில் அசுத்தமும் அசௌகரியமும் ஏற்படுகின்றது. இது நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் நலனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. எனவே அரசாங்கத்தின் பொது இடங்களை பாதுகாக்கும் விதிமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு அமைவாக, மருத்துவமனை வளாகத்தில் வெற்றிலைப் பயன்படுத்துதல் மற்றும் எச்சில் துப்புதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்புகள் மருத்துவமனை முழுவதும் பதியப்பட்டுள்ளன.
இனிவரும் காலங்களில் இத்தடை மீறப்படின், சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கைக்காக அனுப்பப்படுவர். எனவே, இத்தகைய செயல்களில் இருந்து முழுமையாக விலகி, சுத்தம் மற்றும் ஒழுங்கை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார்.
(சு-27)

## காப்பெற் வீதியாக மாறும் நாகதம்பிரான் ஆலய வீதி

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கிராமிய வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கிய மேலதிக நிதியொதுக்கீட்டின் 61 மில்லியன் ரூபா நிதியில் இந்தப் பணி முன்னெடுக்கப் பட்டுள்ளது.
பல வருடங்களாகப் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதியால் அப்பகுதி மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். (ச-113)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 04.10.1942
இறப்பு 07.03.2022

கடந்த 07.03.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர் உயர்திரு.
**விஸ்வநாதர் குருநாதன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
அவர்களின் நான்காம் ஆண்டு
நினைவு நாளான இன்று (21.02.2026)
அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் நமசிவாய !

இல.692, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

மனைவி
திருமதி கு.அமுதவல்லிஅம்மா
021 222 6711
சிவகுரு ஆதீனம்
077 222 0103

(cs60801) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 01 . 1940
மறைவு 15 . 02 . 2026



**திருமதி சோதிமயில் மார்க்கண்டு**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கல்லூரி வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதிமயில் மார்க்கண்டு அவர்கள் கடந்த 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காங்கேசன்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், ஓய்வுபெற்ற ஆசிரியரான காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகராஜா, நாகபூசணி, நவயுவநாதன் மற்றும் கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை - திருமலை), விமலாதேவி, நவரட்ணராஜா, வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (ஆசிரியர்), தங்கத்துரை (உதவி அரசாங்க அதிபர்), இராஜதுரை (லிகிதர்), திலகவதி ஆகியோரின் மைத்துனியும், ஸ்ரீதரன் (உரும்பிராய்), நிர்மலன் (கனடா), முரளிதரன் (கனடா), பகீரதன் (நோர்வே), சோபனா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌரிமனோகரி (ஓய்வுபெற்ற உப அதிபர் - வயாவிளான் மத்திய கல்லூரி), ராஜசுகுணா (கனடா), ஜெயந்தினி (கனடா), அமிர்தினி (நோர்வே), ஸ்ரீதர் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சரண்யன் - பிருந்தினி (உரும்பிராய்), தனஞ்சயன் - பானுமதி (UK), காருண்யன் (UK), நிவேதிகா - துஷான், புருஷோத், பிரவீண் (கனடா), ஜெனனி, ஜெசிக்கா (கனடா), சஞ்சய், ஸ்ரையா (USA), கவின், ரிதன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரணவியின் (UK) பாசமிகு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் கனடாவில் 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
ஸ்ரீதரன் (Sri Lanka - 077 711 0186,021 223 0588)
நிர்மலன் (Canada - 001 647 807 9357)
முரளிதரன் (Canada - 001 647 283 9624)
பகீரதன் (Norway - 0047 996 10429)
சோபனா (America - 001 630 779 7375)

தகவல்:
குடும்பத்தினர்
கற்புலம் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(CS31312) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 05 . 1960
மறைவு 19 . 02 . 2026



**குணரத்தினம் வைகுந்தவாசன்**
(ஓய்வுபெற்ற நூல் நிலைய பொறுப்பதிகாரி - ஊர்காவற்றுறை )

சாவகச்சேரி கோயில் குடியிருப்பை பிறப்பிடமாகவும் தற்போது கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் வைகுந்தவாசன் அவர்கள் கடந்த 19.02.2026 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், குணரஜனி (ராசாத்தி) இன் பாசமிகு கணவரும், ரம்மிகா (பிரான்ஸ்), ஸேந்தீஸ், திவ்விகா ஆகியோரின் ஆசைமிகு தந்தையும், மகாதர்சன் (பிரான்ஸ்), சர்மிலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், புஸ்பலதா, உதயசங்கர் (ஜேர்மனி), திருமாறன் (Maran Video) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணபாலன் (பிரான்ஸ்), குணசீலன், குணராசன் (பிரான்ஸ்), குணவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனனும், அக்ஷரா, ஆதிரன், அருவிகா, அஞ்சனா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது கனவு இல்லத்தில் (தாய் அகம்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நொச்சிக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

வீரபத்திரர் வீதி,
2ம் குறுக்குதெரு,
கோப்பாய் தெற்கு.

மகன் - 077 617 8563
மாறன் - 077 728 6217
பட்டு - 077 172 6286

(cr 47084 ) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக்கொடை

தென்மராட்சிப் பிரதேச செயலக முன்னாள் உதவிப் பிரதேச செயலர் திருமதி தமிழினி சதீஸின் ஓராண்டு நினைவுநாளையொட்டி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற் பகல் ஒரு மணி வரை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் குருதிக்கொடை யாளர்களை இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-9)

## வீடு வாடகைக்கு

யாழ். நகர் மத்தியில் வீடு (முதலாவது மாடி) வாடகைக்கு உண்டு. வியாபார/ அலுவலக பாவனைக்கு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 907 2894

(CS/31316) J-1

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.

விபரங்களுக்கு:
074 300 7992
WhatsApp +44 7414 942508

## DELVON ASSISTANCE FOR SOCIAL HARMONY (DASH)

DASH MINE CLEARANCE

### Admin & Logistics Officer

**Role Summary:**
The Admin & Logistics Officer will assist with day-to-day requirements and provide operational support across all areas managed by the DASH Field Office in Kilinochchi.

**Qualifications:**

- Degree or Diploma in a relevant field with work experience.
- Proficiency in English, Tamil, and Sinhala.
- Strong knowledge of MS Office (Excel, Word, PowerPoint).
- Age between 20–35 years.
- Team-oriented, able to work under pressure with minimal supervision.
- Preference will be given to Male candidates residing in Kilinochchi with a bike driving license.

**Employment Type:** Fixed-term contract

A competitive remuneration package will be offered based on qualifications and experience.

**Application Process: Send your CV via mail to deepal@dash.lk or WhatsApp to 0760106537**

**Closing date: 28th Feb 2026**

(cs.47081) N-1

## விசா சேவைகள்

* CANADA * UK * FRANCE * SCHENGEN COUNTRIES

- 99% கடந்த கால Success Rate
- 100 % Money Back Gurantee
- நேர்மையான முறையில் சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்
- சிநேக பூர்வமான சிறந்த ஆலோசனைகள்

சமூகவலைத்தள போலி முகவர்கள் மூலம் உங்கள் பணம் மற்றும் வாழ்க்கையினை இழக்காதீர்கள்.

14 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற **Winstar Visa Consultants** உடன் இணையுங்கள்

முன்பதிவு செய்து நேரில் வரவும்

முன்பதிவுகளுக்கு - **071 071 6979**

**WINSTAR CONSULTANTS PVT LTD**
**45, VEMBADI STREET, JAFFNA**

(CS 31184) A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**For Your Tickets Contact No - 0711999900**

## காணி விற்பனைக்கு

வசாவிளானில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
075 0979 667, 072 0110 921

(CS/31318) J-1



## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லா மணமக்களுக்கும் மணமகன்கள் மணமகள்கள் உண்டு. எல்லா இனத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். மற்றும் R.C, Non R.C மணமக்களும் எம்மை தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: வி.ஜெயந்தி
077 97 33 183


## கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் (பிலி-1:21)

மண்ணில் 28 . 08 . 1934

மகிமையில் 20 . 02 . 2026



### இரத்தினம் செல்வநாயகம்

இரத்தினம் செல்வநாயகம் அவர்கள் நேற்று (20.02.2026) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - அன்னலட்சுமி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கனகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அருள்நேசராணியின் அன்புக் கணவரும், பாலராஜா, தையல்நாயகி, காலஞ்சென்ற இரடன சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செந்தமிழ்ச்செல்வி மற்றும் அவரது குடும்பத்தினர் (கனடா), மற்றும் அன்பழகன் குடும்பம் (நோர்வே), இளங்கோ குடும்பம் (கனடா), அருள்மொழி குடும்பம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நோர்வே யில் வசிக்கும் பேரப்பிள்ளைகள், கனடாவில் வசிக்கும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பேரப்பிள்ளைகள் ஆகியோரின் பேரனும் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இல.. 316/2, ஸ்ரான்லி வீதி, பொன்னம்பலம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, அதனை தொடர்ந்து தாவடியில் உள்ள கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்பு: 077 360 9005/ 076 473 9181 தகவல்: குடும்பத்தினர்.

(CS 31320) A

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 09 . 1951

மறைவு 13 . 02 . 2024



### அமரர் சபாரத்தினம் நடராசா

(உரிமையாளர் - ராஜன் ஆபரண மாளிகை, சாவகச்சேரி)

திதி : மாசிமாத வளர்பிறை சதுர்த்தி


அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து
நல்வழிப்படுத்திய எங்கள் குடும்பத் தலைவரே....
ஆண்டு இரண்டு கடந்தாலும் ஆறவில்லை தெய்வமே!
உங்கள் பிரிவுத் துயரம், உங்கள் நினைவலைகள்
இன்னும் எம் மனதில் பசுமையாகவுள்ளது...
எமது வளமான வாழ்விற்கு வழிகாட்டிய
உங்கள் நினைவுகளுடன்
தங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CR 47093) A

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பு புவனராசா

(ஓய்வுநிலை நிர்வாக கிராம உத்தியோகத்தர்- பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்)

தம்பகாமம் பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பு புவனராசா (ஓய்வுநிலை நிர்வாக கிராம உத்தியோகத்தர் - பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகம்) அகில இலங்கை சமாதான நீதவான், தலைவர் - கமக்காரர் அமைப்பு - தம்பகாமம், தர்மகர்த்தா - செருக்கன்சாட்டி அம்மன் ஆலயம், உப்புக்கேணி பிள்ளையார் ஆலயம், மலராசிரியர், பொது நூலகம் - பச்சிலைப்பள்ளி பிரதேச சபை). அவர்கள் நேற்று (20.02.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை சின்னத்தம்பு - சொர்ணலெட்சுமி தம்பதியரின் மகனும், கதிரேசர் வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மருமகனும், உமாநிதி புவனராசாவின் (ஓய்வுநிலை வலயக் கல்விப்பணிப்பாளர் முல்லைத்தீவு) அவர்களின் அன்புக் கணவரும், ஜெயராசா (ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தர்மராசா (ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் - தென்மராட்சி), வதனராசா (ஓய்வுநிலை ஆசிரியர், கிளி/பளை மத்திய கல்லூரி, தலைவர் - பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் சகோதரரும், ரூபி, கோகுலவேணி, திலகவதி, இரத்தினசிங்கம், காலஞ்சென்ற பூபாலசிங்கம், கலாநிதி ஆகியோரின் மைத்துனரும், சௌத்திரி, சைத்தகி, விசாகன், துளசிகரன் ஆகியோரின் சிறியதந்தையும், துவேதன், சாருதன், சாருஜா, அபிலாசா, சிவசுதன் ஆகியோரின் பெரியதந்தையும், சர்மௌா, விஜிதா, கோபிகிருஷ்ணா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பகாமம் மலையான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தம்பகாமம், பளை.
077 9023 669 (சகோதரன்), 077 5286 991 (மனைவி)

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 09 . 1934

மறைவு 19 . 02 . 2026



### வைத்திலிங்கம் கனகரத்தினம்

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு 5ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கனகரத்தினம் அவர்கள் கடந்த (19.02.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தையல்நாயகி தம்பதியரின் புதல்வனும், செல்லையா -அன்னம்மா தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீ ஆனந்தகுமார் (அவுஸ்திரேலியா), ஜெயானந்தகுமாரி (ஓய்வுநிலை உடற்கல்வி போதனாசிரியர் யாழ் பல்கலைக்கழகம்), கமலகுமாரி (இத்தாலி), சிவானந்தகுமாரி (கனடா), சதானந்தகுமார் (அவுஸ்திரேலியா), பவானந்தகுமார் (அவுஸ்திரேலியா), மகானந்தகுமாரி (ஆசிரியர் - கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை), வக்சலகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகௌரி (அவுஸ்திரேலியா), சரவணபவஐயர் (ஓய்வுநிலை பேராசிரியர் ஆங்கில மொழி கற்பித்தல் துறை யாழ்பல்கலைகழகம்), குமாரமூர்த்தி (இத்தாலி), சிவகரன் (கனடா), கோமதி (அவுஸ்திரேலியா), பிரசாந்தி (அவுஸ்திரேலியா), மதியழகன் (ஆசிரியர் நாவாந்துறை றோ.க.த.பாடசாலை), பிரேம்குமார் (செலான் வங்கி முல்லைத்தீவுக் கிளை) ஆகியோரின் மாமனாரும், சரண், அருண், கீர்திகன், ஹபினயா, ஹபிசன், ஆர்த்தி, ஆரபி, கவின், மகிர்ஷன், சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு
T.P : 075 639 8165, 077 979 6593

(CS/31315) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ட்ரம்பின் வரிகள் அனைத்தும் சட்டவிரோதம் அமெரிக்க உச்சநீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு!

வொஷிங்டன், பெப். 21
உலக நாடுகளுக்கு எதிராக, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்துள்ள வரி விதிப்புகள் சட்டவிரோதமானவை என்று அமெரிக்க உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. எனினும், இதை ஏற்க மறுத்த ட்ரம்ப், மேலும் 10 வீதம் உலகளாவிய வரிகளை அறிவித்துள்ளார்.

உலக நாடுகளுக்கு எதிராக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்த வரிகள் சட்டவிரோதமானவை என்று அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வருடம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக அதிபர் ட்ரம்ப் தரப்பினர் உச்ச நீதிமன்றத்தை நாடினார்கள். இந்த வழக்கு விசாரணைகள் ஏற்கனவே நிறைவடைந்திருந்தன. இந்த நிலையில், வழக்கு நேற்றுத் தீர்ப்;புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே, கனடா உள்ளிட்ட நாடுகளுக்கு எதிராக, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்துள்ள வரி விதிப்புகள் சட்டவிரோதமானவை என்று அமெரிக்க உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட நீதிபதிகளில் ஆறு நீதிபதிகள் ட்ரம்பின் வரிகளுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியதுடன், அவற்றை உடனடியாக ரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டனர்.

எனினும், இந்தத் தீர்ப்பை ஏற்பதற்கு அதிபர் ட்ரம்ப் மறுத்துள்ளார். இதுவரை விதிக்கப்பட்ட அனைத்து வரிகளும் முற்று முழுதாக நடைமுறையில் இருக்கும். அத்துடன் இன்றிலிருந்து உலக நாடுகளுக்கு எதிராக 10 வீத 'உலகளாவிய வரி' விதிக்கப்படும் என்றும் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ட்ரம்பின் கருத்துகளுக்கும், அவரால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய வரிகளுக்கும் ஜனநாயகக் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் ஜனநாயகத்துக்கு பாரதூரமான ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பதற்கு ட்ரம்பின் கருத்துகள் சாட்சியமாக அமைந்துள்ளன என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (ம)

## கடந்தாண்டில்

# 2,000 கிலோ ஹெரோய்ன் 4,000 கிலோ ஐஸ் மீட்பு!

கொழும்பு, பெப்.21
இலங்கையில் 2025ஆம் ஆண்டுமுதல் இதுவரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் பெருமளவிலான போதைப்
பொருள்கள் கைப்பற்றப்பட்டிருப்பதோடு, 2 இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். நாட்டின் பாதுகாப்புத் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகளின்போது 2,020 கிலோகிராம் ஹெரோய்ன், 4,013 கிலோகிராம் ஐஸ், 15,564 கிலோகிராம் கஞ்சா, 43.3 கிலோகிராம் கொக்ஹெய்ன், 4.8 மில்லியன் அலகுகள் போதை மாத்திரைகள், 2.1 மில்லியன் சட்டவிரோத சிகரெட்டுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025ஆம் ஆண்டில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிடிபாடுகள் மிகப்பெரும் அளவு அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## லண்டனில்...

பெரமுன தெரிவித்துள்ளது. பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் யூனியனில், நாடாளுமன்ற உறுப்பிர் நாமல் ராஜபக்ச உரை நிகழ்த்தவிருந்தார். எனினும், புலம்பெயர் தமிழர்களின் அழுத்தம் காரணமாக அந்த உரை ரத்துச் செய்யப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இவ்வாறான நிலையிலேயே, நாமலின் லண்டன் உரை கைவிடப்படாது என பொதுஜன பெரமுன கூறியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் திஸ்ஸ குட்டியாராச்சி மேலும் தெரிவித்ததாவது:-

புலம்பெயர் புலிகளின் அழுத்தத்துக்கு அச்சப்படும் தரப்பு நாமல்ல. இந்த அழுத்தங்களுக்கு அச்சப்பட்டு ஒதுங்கிவிட மாட்டோம். பிரிட்டனுக்குச் சென்று நாமல் உரையாற்றுவது உறுதி. இந்தத் திட்டத்தை எக்காரணம் கொண்டும் கைவிட வேண்டாம் என்று நாமல் ராஜபக்சவிடம் கூறியுள்ளேன். அவர் சிறந்த முடிவை எடுப்பார்.

நாமல் ராஜபக்சவை உரையாற்ற வருமாறு உலகம் முழுவதிலும் இருந்து அழைப்புகள் வருகின்றன. எனினும், அவருக்கு இருக்கும் பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. தற்போதைய அரசாங்கமும் புலம்பெயர் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே செயற்படுகின்றது - என்றார். (அ-ம-44)

## பயங்கரவாதத்...

மும் வேண்டாம் என வலியுறுத்தி செல்வச்சந்நிதி ஆலய வளாகத்தில் நேற்று கையொப்பச் சேகரிப்பு இடம்பெற்றது.

பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை இந்தக் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன், மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள் கலந்துகொண்டு கையெழுத்துகளைச் சேகரித்தனர். (அ-ம-66)

**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை**
**பளைநகர் பேரூந்து தரிப்பிட மேல்மாடிக்கடை இல BUS - 05 நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 23.02.2026 தொடக்கம் 08.03.2026 வரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 09.03.2026 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 09.03.2026 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பேரூந்து தரிப்பிட மேல்மாடிக் கடைக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | BUS - 05 | 1,032,000.00 | 15,500.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **“தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை”** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **“பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி”** என்ற முகவரிக்கு 09.03.2026 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரசஉத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
07. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
09. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை. 21.02.2026.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியற்கைதிகள்...

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியற்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்தது. எனினும், இதுவரை அவர்கள் எவரும் விடுவிக்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே, விசேட அறிக்கைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய அரசியற் கைதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கூறியுள்ளார்.

நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேலும் தெரிவித்ததாவது:-

அரசியற்கைதிகள் உள்ளடங்கலாக நீண்டகாலம் தண்டனை அனுபவித்துவரும் சிறைக்கைதிகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.துரைராஜா தலைமையில் விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு விரைவில் தனது பரிந்துரைகளையும் அறிக்கையையும் சமர்ப்பிக்கும். அந்த அறிக்கைக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசியற் கைதிகளின் விடயத்துக்காக அமைக்கப்பட்ட இந்தக் குழு, தனது விசாரணைகளை இன, மத பாகுபாடுகள் இல்லாமல் முன்னெடுத்து வருகின்றது. அரசியற் கைதிகளின் தண்டனைக் காலத்தை அல்லது கைதிகளின் தண்டனைக் காலத்தை நினைத்த மாத்திரத்தில் குறைக்கவும், அவர்களை விடுவிக்கவும் முடியாது என்பதால், அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமையவே செயற்படுவோம் - என்றார். (அ-ம)

## இராணுவத்திடம்...

காணாமல் ஆக்கப்பட்டோருக்காக கிளிநொச்சியில் ஆரம்பித்த தொடர் போராட்டம், நேற்றுடன் 9 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதைமுன்னிட்டு விசேட போராட்டமொன்றும் பேரணியும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போதே, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்துமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்ததாவது:-

எமது உறவுகளைத் தேடியலைந்த நாங்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு கோரி, கடந்த 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதியன்று போராட்டத்தை ஆரம்பித்தோம். இந்தப் போராட்டம் இன்றுடன் 9 வருடங்களை நிறைவு செய்துள்ளது. 3 ஆயிரத்து 287 நாள்களைக் கடந்துள்ள போதிலும் எமது கோரிக்கைகள் எந்தவொரு அரசாங்கங்களாலும் கண்டுகொள்ளப்படவில்லை.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. மாறாக இன ஒடுக்குமுறைகள் தொடர்ந்துகொண்டே வருகின்றன. எனவே, எமக்கான தீர்வு விடயத்தில் சர்வதேசம் உடனடியாகத் தலையிட வேண்டும்.

அத்துடன்,

1. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டும்.
2. அரசியல் கைதிகள் நிபந்தனை இன்றி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.
3. நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்கப்படுவதுடன், பதிலுக்கு எந்தச் சட்டங்களும் கொண்டுவரப்படக்கூடாது.
4. வடக்கு கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் முற்றாக அகற்றப்பட வேண்டும்.
5. தமிழர் தாயகத்தில் உள்ள மனிதப் புதைகுழிகள் அகழ்ப்பட வேண்டும் என்பதுடன், இந்தப் பணிகளை சர்வதேச நிபுணர்கள் கண்காணிக்க வேண்டும்.
6. பத்திரிகையாளர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிகள் எதிர்நோக்கும் புலனாய்வு அச்சுறுத்தல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
7. பௌத்த மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும்.
8. தமிழர் தாயத்தில் இடம்பெறும் வளச் சுரண்டல்கள் நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை இந்தப் போராட்டத்தின் ஊடாக நாங்கள் முன்வைக்கின்றோம் - என்றனர்.

(அ-ம-35-113)

## விசாரணைக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பான ஊழல் மற்றும் மோசடிகள் குறித்த விசாரணையில் வாக்குமூலம் வழங்குவதற்காக மைத்திரி விக்கிரமசிங்க அழைக்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையிலேயே, உடல்நலக் குறைவு காரணமாக விசாரணைக்கு முன்னிலையாக முடியாது என்று அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தனது வீட்டுக்கு வந்து வாக்குமூலம் பெற்றால், அவர்களின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மைத்திரி விக்கிரமசிங்கவின் அறிவிப்புக்கு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் என்று தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

முன்னாள் ஜனாதிபதிரணில், பிரிட்டனில் இடம்பெற்ற அவருடைய மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளச் செல்வதற்கே அரச நிதியை மோசடியாகப் பயன்படுத்தினார் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## இலங்கை...

மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி அநுர, பிரதமர் மோடியை நேற்றுச் சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே, இலங்கை எப்போதும் இந்தியாவின் மதிப்புமிக்க அயல்நாடு என்று பிரதமர் மோடி ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கை இந்தியா இடையிலான இருதரப்பு உறவுகளில் சமீப நாள்களாக ஏற்பட்டுவரும் முன்னேற்றங்கள் தொடர்பில் இரு தலைவர்களும் நீண்டநேரம் ஆலோசனை நடத்தியுள்ளனர். அத்துடன், இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

உட்கட்டமைப்பு, சுகாதாரம், திறன்மேம்பாடு மற்றும் கலாசாரம் உள்ளிட்ட துறைகள் தொடர்பிலும் ஜனாதிபதி அநுரவும், பிரதமர் மோடியும் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். இந்தியா இலங்கை இடையில், எரிசக்தி இணைப்பை ஏற்படுத்துவது தொடர்பில் அண்மைக்காலமாகப் பரிசீலிக்கப்பட்டுவரும் நிலையில், இந்த விடயம் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ-ம)

## மாணவி...

மாணவி 7 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்.

இதேவேளை, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகத் துறையில் நகுலேஸ்வரன் வின்சனா எனும் மாணவி 4 தங்கப்பதக்கங்களை வென்று சாதித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## சுன்னாகம்...

அத்துடன், தமிழர் பகுதிகளுக்கு தமிழ் மொழி பேசும் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்தது. இவ்வாறான நிலையிலேயே, சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக, சி.நிதர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ-ம-26)

## கச்சதீவு...

பெப்ரவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன என்று யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:-

கச்சதீவுப்பெருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. எதிர்வரும் 27ஆம் திகதி மாலை நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் காலை திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். இந்த விழாவுக்கான பயண ஒழுங்குகள் அனைத்தும் மிக நேர்த்தியாகச் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து, எதிர்வரும் வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிமுதல் கச்சதீவுப் பெருவிழாவுக்குச்செல்லும் பயணிகளுக்கான குறிகாட்டுவான் நோக்கிய பேருந்துச் சேவை இடம்பெறும். பகல் ஒரு மணிவரை இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்படும். அதன் பின்னர் குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்கு எந்தப் படகுச் சேவையும் இடம்பெறாது.

குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவுக்கு படகுச் சேவைக்கான ஒருவழிக் கட்டணமாக ரூபா ஆயிரத்து 200 ரூபா அறவிடப்படும். நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்கான ஒரு வழிக்கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கான தங்குமிட வசதிகள், கூடாரங்கள், உணவு வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள், மலசலகூட வசதிகள், குடிதண்ணீர் தேவைகள், பாதுகாப்பு, ஒலி ஒளி வசதிகள், கடல் மற்றும் தரைப் போக்குவரத்து ஒழுங்குகள், தனியார் கடற்போக்குவரத்து படகுகளின் கட்டண நிர்ணயம், கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கச்சதீவுக்குச் செல்லும் பக்தர்களுக்கு 27ஆம் திகதி இரவு உணவு வழங்கப்படாது. 28ஆம் திகதி காலை உணவு இலவசமாக வழங்கப்படும் - என்றார்.

(அ-ம-26)

## வணிக...

குட்பட்ட வெதுப்பகம் ஒன்றிலும் பல்பொருள் அங்காடி ஒன்றிலும் காலாவதியான உணவுப்பொருட்களை விற்பனையின் பொருட்டு களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை விசேட சோதனை நடவடிக்கையின் போது உறுதிசெய்யப்பட்டது. இதையடுத்து, அந்த வணிக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, வணிக நிலையங்களின் உரிமையாளர்களை கடுமையான எச்சரித்த நீதவான், அவர்களுக்கு முறையே 40 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாவை தண்டமாக விதித்தார்.

(அ-ம-100)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் இளந்தைக்குளம் வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- மாம்பழச் சந்தியிலிருந்து 350m தூரம்.
- ஒரு பரப்பின் விலை 48 இலட்சம்

தொடர்பு:- 076 860 2770
076 987 8617

(CS 31321 A)A

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பகுதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- 1 1/2 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 1 பரப்பின் விலை 8 இலட்சம்,
- நிலப்பரப்பு, நல்ல சூழல்.

தொடர்பு:- 076 990 3039

(CS 31321 C)A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கால்நடைகளின் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.21

நீர்வேலி,கோப்பாய்ப் பிரதேசங்களில் கால்நடைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

குறித்த பகுதிகளிலுள்ள விவசாய நிலங்களில் மேய்சலுக்காகக் கட்டப்படும் கால்நடைகளே இவ்வாறு திருடப்படுகின்றன.

நீர்வேலித் தெற்குப் பகுதியில் தோட்டக் காணியில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த கன்று ஈனும் பருவத்திலிருந்த பசுமாடு கடந்த வாரம் திருடப்பட்டுள்ளது. இதேபோன்று அடிக்கடி கால்நடைகள் காணாமற்போகின்றன என்று கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர். (க-17)

### வேலையாட்கள் தேவை

இல. 310 A Hospital வீதியில்
அமைந்துள்ள வியாபார நிலையத்திற்கு
விற்பனை ஊழியர்கள் தேவை.
ஆண்கள் மாத்திரம்.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
வயது எல்லை (20-40)

தொடர்புகளுக்கு:- 077 776 3533

(CS/31313) J-1

### காணி விற்பனைக்கு

உரும்பிராயில்
3 1/2 பரப்பு
காணி விற்பனைக்கு
உண்டு.

074 001 9724

(cs.60806) N-1

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள விநியோக நிறுவனத்திற்கு ஓட்டோவில் ICE Cream விற்பனை செய்வதற்கு சாரதி தேவை.

தொடர்பு: 077 411 5335
076 561 5492

(CS 31319)A

### ENGLISH CLASSES

Zoom அல்லது தனியாகவும்
அல்லது குழுவாகவும்
வீடு வந்து கற்பிக்கப்படும்.

Students, Workers
and for
University students

*Grammar *Spoken

T.P: 077 33 14 608

(CS 31323) A

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமரா வீதியில்
24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 1 பரப்பின் விலை முகப்பு பகுதி 8 இலட்சம், பின் பகுதி ஏழு இலட்சம், மூன்றாம் பகுதி 6 இலட்சம்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- அமரா வீதி முகப்புடன்
- A-9 வீதியில் இருந்து 250 மீற்றர் தூரம்

தொடர்பு:- 076 7390 413

(CS 31321 B) A

## மரண அறிவித்தல்

பிறப்பு
17
06
1936



இறப்பு
18
02
2026

### சுப்பையா சுந்தரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - யாழ். தொழில்நுட்பக் கல்லூரி)

யாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சுந்தரம்பிள்ளை அவர்கள் 18-02-2026 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், அன்னப்பிள்ளை, இலட்சுமி, சின்னத்துரை ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சாரதாதேவி அவர்களின் அன்புக் கணவரும், சுபாஷினி, சுபாகரன், சுபாநிதி, காலஞ்சென்ற சுபாரஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவானந்தன், இஷானி ஆகியோரின் அன்பு மாமனாரும், தீபிகா, சேயோன், நிகிதா, நேத்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கணேசன், சாவித்திரி மற்றும் இலட்சுமி (மலேசியா), சண்முகநாதன் (மலேசியா), இந்திரா (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் விக்கினராசா, சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மனோரஞ்சிதம், காலஞ்சென்றவர்களான நாகம்மா (ஓய்வு நிலை - ஆசிரியர்), செல்லம்மா (ஓய்வுநிலை - ஆசிரியர்), இரத்னவேல் (ஓய்வுநிலை அரச அதிபர்) மற்றும் பூபாலசிங்கம் (ஓய்வுநிலை தபாலதிபர்), காலஞ்சென்ற தங்கம்மா (ஆசிரியர்) மற்றும் இலகநாதன், சந்திரா, யோகா, விசுவநாதன், உமயா, அருமைநாதன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் சுழிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலைக் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


தொடர்பு :
சுபாகரன் - மகன் Mobile: +614 0697 8326
ஜீவன் - மருமகன் Mobile: +141 6996 2668
சாரதாதேவி - மனைவி Mobile: +947 7390 5039

தகவல்:
குடும்பத்தினர்.

(cr 647081 ) N-1

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை விவேகானந்தா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அராலி, மணல் தறைலேன், கந்தர்மடம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை விவேகானந்தா அவர்கள் கடந்த 14.02.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலா (தேவி) அவர்களின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்றவர்களான தனலக்சுமி, கனகலட்சுமி மற்றும் இராமகிருஷ்ணன் (மலேசியா), குணபாக்கியலட்சுமி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிர்ஜிதா (ஜீத்தா - லண்டன்), வினர்ஜிதா (விஜி -லண்டன்), தேவஜிதா (தேவா - சிங்கப்பூர்), பாலஜிதா (கவிதா - இலங்கை), நிஷானி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (லண்டன்), நிமலேசன் (லண்டன்), இந்திரன் (சிங்கப்பூர்), குகராஜசிங்கம் (இலங்கை), தவக்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமாவும், தனியா, விவேக், ஷயானா, நிஷங்கா, பிரவீன், ஆனந் பிரிவிஷா, ஹர்ஷா, நிகேஷ், எழினா ஆகியோரின் பாசமிகு பேரனும், சண்வின், அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பூட்டனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பேரின்பநாயகம் மற்றும் நவமணி, காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், தனலட்சுமி மற்றும் நவலோஜனா, காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் பத்மலோஜினி, வரதலட்சுமி, காலஞ்சென்ற சுகிர்தா மற்றும் ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.02.2026 சனிக்கிழமை பிற்பகல் 5.00 - 9.00 மணிவரையும் 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 6.30 மு.ப. 7.30 மணிவரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு (Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 wood bine Ave, Markham, ONL3R5G1, Canada) 22.02.2026 முற்பகல் 10.00 மணிக்கு தகனம் (North Torontoly ON LOH IGO, Canada) செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 23.11.1940 — மறைவு 14.02.2026

தொடர்பு:
077 250 3237

தகவல்
மகள் - கவிதா
மருமகன் - குகராஜசிங்கம்

cs60804) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.02. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.